செ.வெ. எண்: 271

நாள்: 02-08-2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 2.8.2012

திருநெல்வேலி மாவட்டம், ஆயுதப் படை பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. A.முனியசாமி அவர்கள் 29.7.2012 அன்று பணியிலிருக்கும் போது, மாரடைப்பு ஏற்பட்டு, மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை தலைமைக் காவலர் திரு. முனியசாமி அவர்கள் பணியில் இருக்கும் போது காலமானார் என்னும் செய்தி எனக்கு மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது. திரு. முனியசாமி அவர்களின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவரது மனைவிக்கும், குடும்பத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாரடைப்பால் காலமான காவல் துறை தலைமைக் காவலர் திரு. முனியசாமி அவர்களின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து இரண்டு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழக முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9